***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 87/2024 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | ஹரிஹரசுதன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 19.06.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது கடையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தச்சு தொழில் செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன கொத்தாலி என்னுடைய அப்பா. 03.06.2020ம் தேதி என் தகப்பனார் மாவு வாங்க மாலை 06.00 மணி அளவில் அவரது சைக்கிளில் சென்று விட்டு மாவு வாங்கி விட்டு 06.45 மணியளவில் மாவு கடையிலிருந்து எங்கள் வீட்டிற்கு திரும்ப வரும் வழியில் கிழக்கு நோக்கி என் தகப்பனார் வரும் போது மாவை வாங்கி விட்டு ரோட்டை கடக்க முயன்ற போது மகேந்திரா வேன் ஒன்று மிகவும் வேகமாக Horan அடிக்காமல் வந்து என் அப்பாவின் மீது ஏறிவிட்டது. மகேந்திரா வேன் ஓட்டி வந்தவர் சுரேஷ். எனது அப்பா ரோட்டை கடக்கும் போது நான் பக்கத்தில் வண்டியில் வந்து கொண்டிருந்தேன். எனது அப்பா வேனுக்கு அடியில் மாட்டி கொண்டார். என் அப்பாவிற்கு தலை, மூக்கு, வலது கை, இடது கை அடிபட்டிருந்தது. எனது அப்பா இறந்து விட்டார். பின்னர் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் தென்காசி மருத்துவமனை சவக்கிடங்கிற்கு கொண்டு சென்றார்கள்.

பின்னர் கடையம் காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி ஆஜர் ஆகவில்லை. எதிரியின் வழக்கறிஞர் ஆஜர் ஆகி உள்ளநிலையில் எதிரியை அடையாளம் காண்பிக்க அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது )

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi